காஞ்சி

# நாடு



தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
வரலாற்று ஆராய்ச்சி
1 மார் 1993
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்,
சென்னை - 600 008.

பேரறிஞர் அண்ணா இலக்கியப் பேரவையின் திங்கள் இதழ்

## தமிழ்ச் சமுதாயம் நன்றியுடன் நினைவு கூறும் மாமனிதர்கள்

**மார்ச்சு 2**

முதல் இந்தி எதிர்ப்புப் போர் வீரர்
ஈழத்து சிவானந்த அடிகள்—நினைவு

**மார்ச்சு 10**

பாவலர் பெருஞ்சித்திரநார் தோற்றம்.

**மார்ச்சு 14**

இந்தி எதிர்ப்புப் போரில் உயிரை ஈந்த
தாளமுத்து—நடராசன்—நினைவு.

**மார்ச்சு 19**

பகுத்தறிவுப் பாசறையின் போர்
தளபதி பட்டுக்கோட்டை அழகர்சாமி—நினைவு.

மலர்—1 ] 7—3—1993 [ இதழ்—9

JL
M2112, N92KN
N93.1-9
217208

சிறப்பாசிரியர்:
டாக்டர். சி.என்.ஏ. பரிமளம்.

'காஞ்சி நாடு' வளர்ச்சி நிதிக்கு அண்ணன் புன்செய்ப் புளியம் பட்டி P. A. சாமிநாதன், Ex. M.P. அவர்கள் ரூ 1000/- நன்கொடை.

---

பேரறிஞர் அண்ணா இலக்கியப் பேரவை வளர்ச்சி நிதிக்காக பேரறிஞர் அண்ணா - இலக்கியப் பேரவையும், வான்மதி கலை மன்றமும் இணைந்து வழங்கும்.

'பேரறிஞர் அண்ணாவின்'

# 'அப்போதே சொன்னேன்'

நாடகம்

14-3-93 அன்று மதியம்

ராஜா அண்ணாமலை மன்றத்தில்

நாடக ஆக்கம், வசனம், இயக்கம்

குடந்தை குமணன்

நுழைவு கட்டணம் : ரூ 100, 50, 25 அனுமதி இருவர்

---

'காஞ்சி நாடு'

வாழ்நாள் உறுப்பினர் பட்டியல் தொடர்ச்சி

திரு. தோப்பூர் திருவேங்கிடம், Ex.M.L.A.

திரு. வெற்றிவேலு, கோவை

டாக்டர் மதன்மோகன், விருத்தாசலம்

தி[illegible] சுப. சாமிநாதன், குன்னூர்

திரு. N. V. N. சோமு, B.A.,B.L.

---

# காஞ்சி நாடு

திருவள்ளுவர் ஆண்டு 2024 கும்பம் (மாசி)

புதியதோர் உலகம் செய்வோம்
கெட்ட போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்

—புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

## பொம்மை விளையாட்டு

மனித வாழ்க்கையில் குழந்தை பருவம் ஓர் அருமையான பருவம். கள்ளங் கபடமற்ற பருவம். எதைச் செய்யவேண்டும், எதைச் செய்யக்கூடாது என்று தெரியாது. குழந்தை தவறாக எதையாவது செய்து விட்டால் எவரும் அதை தவறாக எடுத்துக்கொள்ள மாட்டார் கள். போகப் போகச் சரியாகி விடும்; என்று தான் சொல்லுவர். குழந்தை பெரியவர்களைப் பார்த்து 'டேய்' என்று சொன்னால் மன்னிப்போம். அதையே வளர்ந்து பெரியவனாகி சொன்னால் கண்டிப்போம். அதேபோல் குழந்தையாய் இருக்கும்போது பொம்மை விளையாட்டுகள் விளையாடும் குழந்தை அதையே பெரியவனாக வளர்ந்த பிறகும் செய்தால் குழந்தையின் மனவளர்ச்சியை சந்தேகிப் போம். குழந்தை தென்னம் பிஞ்சு காய்களை வைத்து தேரிழுக்கும்; மழை நீரில் காகிதத்தில் ஓடம் செய்து விளையாடும். அதையே பெரியவனாகிச் செய்தால் ஊர் சிரிக்கும். ஆனால் இங்கோ பெரியவர்கள் தேரிழுக்குகிறார்கள், தெப்பம் விடுகிறார்கள், விழா நடத்துகிறார்கள், அவர்கள் மனவளர்ச்சி பற்றி அறிவுலகம் சந்தேகப்படுகிறது. அதிலும் பெரிய கொடுமை குடிக்க தண்ணீர் இன்றி மக்கள் வாடும்போது, குடிநீரை கொண்டு வந்து குளத்தில் கொட்டி தெப்பப் விடுகிறார்கள். அறிவுலகம் நகைக்கிறது. ஆன்மீக வாதிகள் மனிதன் தொல்லைகளில் சிக்கி தவிக்கிறபோது சொல்லுகிற சமாதானம்—'மரம் வைத்தவன் தண்ணீர் விடுவான்'. ஆனால் இங்கோ மரங்கள் தண்ணீர் விடுகின்றன—மரம் வைத்தவனுக்கு!

---

## 'நாடு'

ஓர் ஆண்டு நன்கொடை ரூ. 25/-
வாழ்நாள் நன்கொடை ரூ. 250/-

நாடு இதழ் விற்பனையில் எங்களுக்குத் துணை புரியுங்கள் வாழ்நாள் உறுப்பினராகுங்கள்.

பேரறிஞர் அண்ணா இலக்கியப் பேரவை
துணிவு தெளிவு கனிவு

# செய்திகள்

## பேரறிஞர் அண்ணா இலக்கியப் பேரவை

### சிதம்பரம்

தென் ஆற்காடு மாவட்ட பேரறிஞர் அண்ணா இலக்கியப் பேரவையின் சிதம்பரம் கிளை பேரறிஞர் அண்ணா பற்றி தொடர் சொற்பொழிவுகள் நடத்தி வருவது தெரிந்ததே இந்தத் திங்கள் 14—3—93 அன்று சிதம்பரம், தவத்திரு ஆறுமுக நாவலர் மேல்நிலைப் பள்ளியில் மாலை 5 மணி அளவில் பேராசிரியர் பதிப்புச் செம்மல் டாக்டர் ச. மெய்யப்பன் அவர்கள் தலைமையில் பேராசிரியர் தி. சபாபதி மோகன், M I A Phd, அண்ணாமலை பல்கலைக் கழகம், சட்டமன்றம், பாராளுமன்றத்தில் அண்ணா எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றினார். தொடக்கத்தில் பேரறிஞர் அணணா இலக்கியப் பேரவையின் தென்ஆற்காடு மாவட்ட அமைப்பாளர் திரு. சிதம்பரம் மயில் வாகனன் வரவேற்புரையாற்றினார். முடிவில் திரு. ரத்தின மணி நன்றி கூறினார்.

## பேரறிஞர் அண்ணா இலக்கியப் பேரவை

### நெய்வேலி

பேரறிஞர் அண்ணா இலக்கியப் பேரவை பொது உறுப்பினர் கூட்டம் நெய்வேலி நகரில், பேரவையின் சிறப்புத் தலைவர் மு. அருணகிரி அவர்கள் இல்லத்தில், 18—2—93 அன்று மாலை

7 மணி அளவில் நடைபெற்றது. பொது உறுப்பினர் கூட்டத்திற்கு பேரவையின் நெய்வேலி கிளை தலைவர் வழக்கறிஞர் மணவாளன் தலைமை வகித்தார். செயலாளர் சு. முரளி வரவேற்றார். முடிவில் பேரவை பொருளாளர் க. இராமசாமி நன்றி கூறினார்.

கூட்டத்தில் கீழ்கண்ட புதிய நிர்வாகிகள் நெய்வேலி பே.அ.இ. பேரவைக்கு தேர்வு செய்யப்பட்டனர்.

| | | |
|---|---|---|
| சிறப்புத் தலைவர் | : | மு. அருணகிரி, B.Com. |
| தலைவர் | : | ச. மணவாளன், B.A.B.L. |
| செயலாளர் | : | வி. திருவள்ளுவன், M.Sc Mphil. |
| பொருளாளர் | : | க. இராமசாமி |
| துணை பொருளாளர் | : | சு. முரளி |
| | : | இரா. இளவரசன் |

செயற்குழு உறுப்பினர்கள் :

1. க. பிச்சைவேல்
2. கோ. சிவகுமார்
3. வெ. குமார்
4. அ. செழியன்
5. முத்து. மோகன்
6. சி. கார்த்திகேயன்
7. வி. பாண்டியன்
8. சு. அண்ணாதுரை
9. ச. செங்குட்டுவன்
10. பி. கிருட்டிணமூர்த்தி

## அறிஞர் அண்ணா இலக்கியப் பேரவை- நெய்வேலி பொது உறுப்பினர் கூட்டத்தில் 18-2-93 அன்று நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு :

1. நெய்வேலி பேரறிஞர் அண்ணா இலக்கியப் பேரவைக்கு நூற்றுக்கு குறையாமல் உறுப்பினர்களை சேர்ப்பது என்றும், பேரவையின் சார்பில் வெளிவரும் 'காஞ்சி நாடு' திங்கள் இதழுக்கு ஆண்டு உறுப்பினர் கட்டணமாக ரூபாய் இருபத்தைந்து உறுப்பினர்களிடம் பெறுவது என்றும் தீர்மானிக்கப்படுகிறது.

2. இரு திங்களுக்கு ஒருமுறை பேரவைசார்பில்



217208

சிறப்பு நிகழ்ச்சி ஏற்பாடு செய்து, பேரறிஞர் அண்ணா அவர்களின் தமிழ்மொழி, இனம், சமூக அரசியல், பொருளாதார கருத்துக்களை அறிஞர் அண்ணா ஆர்வலர்களான அறிஞர்களை அழைத்து சொற்பொழிவுஆற்றிட முடிவு செய்யப்படுகிறது.

3. ஒவ்வொரு வருடமும் பேரறிஞர் அண்ணா பிறந்தநாள், தந்தை பெரியார் பிறந்தநாள், பொங்கல் திருநாள் விழாக்களை சிறப்புடன் கொண்டாடுவது என தீர்மானிக்கப்படுகிறது.
4. மார்ச்சு (அ) ஏப்ரல் திங்களில் அறிஞர் அண்ணாவின் 24வது நினைவு தின நிகழ்ச்சியை தமிழ்இலக்கிய பண்பாட்டு சிறப்புக் கூட்டமாக நடத்துவதுஎன முடிவு செய்யப்படுகிறது.

## சென்னை

பேரறிஞர் அண்ணா இலக்கியப் பேரவை சென்னை மாவட்ட அமைப்பு பள்ளி பிள்ளைகளுக்கான, (10, 11, 12 வகுப்பு பிள்ளைகள்) அறிஞர் அண்ணா பற்றிய பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி நடத்துகிறது

8-3-1993 திங்கட்கிழமை காலை 10-00 மணி அளவில் வெலிங்டன் சீமாட்டி மேநிலைப் பள்ளியில் மேற்கண்ட போட்டிகள் நடைபெறும்.

பரிசளிப்பு விழா 14-3-93 அன்று ராஜா அண்ணாமலை மன்றத்தில் மாலை 4-00 மணிக்கு நடைபெறும் என அமைப்பாளர் செல்வி சரோஜா, M.A.Med. தலைமை ஆசிரியை வெலிங்டன் சீமாட்டி மேநிலைப் பள்ளி, அவர்கள் அறிவித்துள்ளார்.

---

## மறைவு

பிரபல தோல் நோய் மருத்துவரும் முன்னாள் அமைச்சர் க. இராசாராம் அவர்களது இளைய சகோதரரும், கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி தோல் நோய் மருத்துவ பேராசிரியருமான Dr. K இராசேந்திரன், M.D.D.D. 16-2-93 அன்று முடிவெய்தினார். அன்னார் குடும்பத்திற்கு நமது ஆழ்ந்த அனுதாபங்கள். ஆ-ர்.

# 'காடுடையார்'

—பேரறிஞர் அண்ணா—

நாடு இன்றிருக்கின்ற நிலை ஆங்காங்கே கொள்ளை' கொலை, வழிப்பறி, அதிகார வர்கங்களின் ஆணவ வெறி, மூடநம்பிக்கைகளின் மொத்த உருவமான சமயங்கள் அதனால் ஏற்படும் மக்கள் உயிரிழப்பு, இப்படிப்பட்ட செய்திகளை தினம் தினம் கேள்விப்படும் போது நாம் வாழ்வது நாடல்ல காடு எனும் நினைப்பே நம்முன் எழுகிறது. இதை பேரறிஞர் அண்ணா அவர்கள் 'காடுடையார்' எனும் கவிதையில் படம் பிடித்து காட்டினார் அன்று; ஆம் 1965-ல், அதை மீண்டும் இங்கே தருகிறோம்—மக்கள், மாக்கள் ஆகக்கூடாது என்று எடுத்துரைக்க......

(ஆர்)

கதிரவனும் புக அஞ்சிப் பன்னாள்
காணாமலேகிடுவான்

காரிருள் சூழ்கானகம், கற்பாறை
மிகுந்த தஃது

கரடிபுலி ஓநாய்கள் கடுவன்கள்
பலவும் உண்டு

காட்டாறு புரண்டோடும், முதலை
ஆட்சி செய்யும்

கொத்தவரும் பெரும்பறவை
வல்லூறுகட்கும் குறைவு இல்லை

இக்கொடுமைக் காட்டிற்குள்ளே
மானின் கூட்டம்,

செத்தபடி இருந்தது; எனினும்
மிச்சம் மீதி

இனம் பெருக்கி வந்தது; ஏன்?
இறைதானாக!

அக்காட்டில், தாய்ப் புலிக்கு
அடங்காத குட்டி ஒன்று

அதன் போக்கில் அங்குமிங்கும்
அலைந்தபோது

தந்திரமாய்ப் பிடித்ததனைக்
கொண்டு சென்றான்

தன் பிழைப்புக்கிது நடத்தும்
வேடுவன்தான்.

சிறிது பணம் கொடுத்தோர்ச்
சீமான் அதனை வாங்கி

கூண்டமைத்து மாளிகையில்
வளர்த்து வந்தான்.

ஆண்டுசில அவ்விடத்தில்
இருந்த குட்டி

அய்யோ என்றெவரும் அலறும்
வண்ணம்

ஓங்கி வளர்ந்து ஆங்கு
உறுமிக் கிடந்ததுகாண்,

சற்றுத் தொலைவினிலேநின்றபடி
சீமானும்

பாவம்,இதன் தாயை மூன்றடியில்
கொன்றுவிட்டேன்

கதறிக் கிடந்ததிது கண்டு
கொண்டுவந்தேனென்று

அதரமதின் சிகப்பெல்லாம்
கண்கள் ஏறி

அலுத்துக் கிடந்திட்ட அழகி
தனக்குச் சொல்வான்.

விலைபேசி முடித்திட்ட வீரய்யன் அங்கிருந்தான்.

இருந்தாலென்ன! விரும்பி அவர் பொய் பேசும்போது

விழுந்தடித்துக் கொண்டுபோய் உண்மை கூறலாமோ!

அவன் பெறும் ஊதியம் அவர் பொய்யை மெய்தானென்று

கூசாமற் மகிழ்விக்கக் கூறுதற்கும் சேர்த்துத்தானே!

குற்றவேல் புரிவதனைக் கற்றுத் தேர்ந்தோன்; அறியானோ!

இருக்கும், இருக்கும், இதன் தாயைக் கொன்றிருப்பார்

பிடிக்குள் அகப்பட்டார் பிழைக்கும் வழிதான் ஏது

என எண்ணி இருந்திட்டாள் விருந்தளித்தாள்

அறிவாளன்றோ அவர் கொண்ட ஆற்றல்.

அணைப்பிலே சிக்கிக்கொண்டு ஆவி போமுன்

எப்படியேனும் தப்பிச் சென்றிட எண்ணும் தையலர்போல்

இப்புலியும் எப்படியும் தப்பிடவே துடித்தபடி இருந்தது காண்.

கலைவல்லாள் காட்டிநின்ற கடைஇடை எழில்தனிலே

கருத்தெல்லாம் செலவிட்டு அலுப்புத் தீர

மதுமாந்தி மல்லாந்து அவன் வீழ்ந்த அந்தப்போது

குடங்களிலே தளும்பினதைக் குடித்தனர்காண் காவலர்கள்.

போதைஏறி புலிக்குரலை குழலெனக் கொண்டொருவன் ஆடுகின்றான்;

கூண்டிற்கு வெளியே நின்று கொஞ்சுமொழி தன்னில்,

குமரியே! உடுத்தியுள்ள இந்த ஆடை என்ன விலை?

பொன்னிழைத்த இப்புடவை உனக்கேது?

எனக்கேட்டுக் குளறுகிறான் வேறொருவன்;

மற்றொருவன் இத்தனை பேர் நாமிங்கு இன்பமாய் இருக்கையிலே

அய்யோ பாவம், இதுமட்டும் கூண்டினிலே இருத்தல் ஏனோ

எனக்கூறிக் கூண்டைத் திறந்துவிட்டான்.

பாய்ந்தோடிச் சென்றது அடவி புலியுந்தானே.

வந்ததை இருந்தவைகள் வரவேற்று உபசரித்து

சென்றிருந்த இடத்தின் சிறப்பென்ன எனக் கேட்க,

நரர்கள் வாழுமந்த நாடதனைக் கண்டுவிட்டால்

கானகராம் நமக்குத் தலைகவிழும் வெட்கத்தால்

என்னநம் ஆற்றல்! ஏதோ வயற்றுக்கு வழி தேட.

மோப்பம் பிடித்தறிந்து மெல்ல நடை நடந்து

இடம் பார்த்து பாய்கின்றோம்,
இடறியும் வீழ்கின்றோம்,
எத்தனையோ இன்னல், பிறகே
இறைதனைப் பெறுகின்றோம்.
நான்இருந்த நாடதனில்
இவ்வாறா;
இல்லை! இல்லை!
உழைக்காமல் உருசியான
பண்டம் பானமெலாம்
வேணமட்டும் உட்கொண்டு
வீணாக்கியும் போடும்
வித்தையினைக் கற்றவர்கள்
மாளிகையில் வீற்றுள்ளார்.
உறுமித் தொலைக்கின்றோம்
பகை, கோபம் காட்டிட நாம்
சிரித்தபடியே அவர்கள்
சித்ரவதை செயவல்லார்!
பல்லும் நகமும் கொண்டு
பலம் காட்டிக் கொல்கின்றோம்
சொல்லாலே சாகடிக்க
வல்லாரும் ஆங்குள்ளார்.
பசிதீர உண்ட பின்னர்
படுத்துறங்கிக் கிடக்கின்றோம்.
உண்டு மகிழ்வதுடன், ஊர்க்
குடியைக் கெடுப்பதற்கு,
விழித்துக் கிடக்கின்றார்
விபரீதம் விளைவிக்க;
சிற்சில வேளைதன்னில்
சச்சரவுகளிடுகின்றார்,
பெரிதும்,பேதம் பகை
மூட்டி கச்சிதமாய் அழிக்கின்றார்,
அடங்கிக் கிடப்பவரை
ஆர்ப்பாட்டக்காரர் சிலர்,
கொன்றும் போடாமல்
குற்றுயிராய் வைததுள்ளார்.
குயில்கள் இங்கும் கூவும்; நாம்
கூறி அல்ல அன்றோ!
கூண்டுக்கிளி குயிலும் கூப்பிட்ட
குரல் கேட்டு,
பாடிக் கிடந்திடு மாங்கு
காசு கட்டளைக் கேற்றபடி.
மயிலாடும் துறையொன்று
மாந்தோப்பருகே உளதன்றோ!
தோகை விரித்து மயில்
தொத்தோம் என்றாடுவது
நம்மை மகிழ்விக்க அல்ல
நாமறிவோம்;
ஆடும் அழகுமயில் ஆங்கு
ஆயிரம் உண்டறிவீர்!
தோகை பளபளப்பு போயினதால்
மெருகேற்றி
பாகையுடைச் சீமான் பள்ளி
அறைதன்னில்,
ஆடை நெகிழுமட்டும், அவர்
ஆசை தீருமட்டும்,
ஆடிடுவார், அவர்க்காவல்
எழும் வரையில்.''
கேட்ட விலங்கினங்கள், தம்
பெருமை குன்றவைக்கும்
ஆற்றல் படைத்த மாந்தர்
அடவியிலே இல்லாமல்
தொலைநாடுதனிலுள்ளார்,
பிழைத்தோம் என்றெண்ணி
இறைதேட விரைந்தன. அததன்
முறைதுறைக் கேற்பவே.
நாடேகி வந்த நல்லறிவு
பெற்ற புலி
நாளெல்லாம் மிகப் பலவாய்

எண்ணி எண்ணி
நாதனைக் கூப்பிட்டு நாமிதனைக்
கேட்டிடுவோம்
உண்மை உணர்ந்தவர்கள்
ஊமையாகி என்ன பயன்!
இந்தவிதம் எண்ணமிட்ட
அந்தப் புலியும் ஓர் நாள்,
ஏகாந்த இடம் சென்று
ஏகம்பனை நினைத்து,
கடுமையாய்த் தவமிருந்து
வந்தது காண் பக்தியுடன்.
பன்னாளாய்ச் செய்துவந்த
தவவலிமை தன்னாலே
கைலைவரை மணம் எட்டி
கண்ணுதலோன் மனம் கிளர,
புன்னகை செய்தபடி
புறப்பட்டான் மழுவேந்தி!
எதிர்வந்து நின்றது இருடபம்
பெம்மான் எழுந்தருள.
நானிபோகும் இடந்தனக்கு
நீ வருதல் கூடாது
முற்றுந் துறந்தவர் முன்
மேனகை சென்று நிற்க
ஞானம் தவம் துறந்து
ஈனம் புரிந்துவிட்டார்
உனைக் கண்டால், தவமிருக்கும்
உத்தமர்க்கு
உள்ளத்தில் என்ன வெறி
மூண்டிடுமோ, யார் கண்டார்?
தவம் புரிந்து அழைப்ப தென்னை
கொல்புலி, அதனாலே
உணவாக வல்லநீ, உறங்கிக்கிட
இங்கு.
நான் சென்று வருகின்றேன்
வேலுண்டு, சூலம்தானு முண்டு.
சிவனாரும் சென்றங்கு
காட்சி தந்தார் புலிக்கே!
மெச்சினேன் உன் தவத்தை
மேலானது செய்தாய்
இச்சை என்ன? கூறு!
இக்கணமேதந் திடுவேன்.
வரம் தரவே ஒப்பி அவர்
வாய்விட்டுச் சொன்னபோது
தவமிருந்த புலியுந்தான்
தாள் வணங்கிக்கூறிற்று
மனம் குழம்பி, மகேசா! நான்
மருண்டு கிடக்கின்றேன்.
தெளிவளிக்க தேவரீரால்
இயலுமென்றே அழைத்தேன்.
அரனே! உன் தயவினால்,
அடியேனுக்கோர் குறைவில்லை
அகன்ற அடவி இது. உணவுக்குப்
பஞ்சமில்லை
பதுங்கிடமும் நிறம்ப இங்கு
பக்குவமும் யாம் அறிவோம்.
நெருங்கிவந்தொர்மைக்கொல்வார்
நெடுந்தொலைவில் உள்ளார்கள்,
அடியேனுக்கு ஆதலினால்
பொருள் ஏதும் தேவை இல்லை
பொருள் தெரிந்து கொள்ளுதற்கே
புனிதா! உமை அழைத்தேன்.
பதுங்கிப் பாயுவதும், பற்கள்
கொண்டு தாக்குவதும்
குருதி குடிப்பதுவும் கொன்று
தின்பதுவும்
எம் இயல்பு; எமக்கென்றே
ஏற்பட்ட முறையதாகும்.
ஆகவேதான் இருள் சூழ்ந்த

இடம் பெற்றோம்.
உழல்கின்றோம்; பணித்தீர்;
உண்மை; மறுக்கவில்லை.
துள்ளிடும் புள்ளி மானைத்
துரத்திப் பிடிக்கின்றோம்
கொன்று தின்கின்றோம்; தேவை;
அதனால், ஐயா!
எம்மைப்போல் இயல்புள்ள
இங்குள்ள விலங்கினங்கள்
இளைத்தாலோ நாங்கள் ஏமாந்து
இருந்தாலோ
எமை எதிர்த்துமே கொத்தும்
பிடித்தும் போடும்.
திடுமென இடிவிழும்
சாவோம் சிலரும்
பெருமழையில் வெள்ளத்தில்
மூழ்கிப்போவோம்,
தீ கிளம்பி சிலவேளை எமை
தீய்த்துப்போடும்
பெருமரங்கள் சாய்வதனால்
உண்டாகும் பேராபத்து
வேடுவரும் கொல்லுதற்கு
வந்திடுவர் சிலநாளில்
இத்தனைக்கும் ஒப்பித்தான்
இங்கிருந்து வருகின்றோம்
இறைமுறையை மீறப்போமோ
என்பதனால்; மெய்யாய் ஐயா!
மருண்டவிழி மாதர்களை
அருகிழுத்து
அவர் கதறிட கத்தரிப்
பிடிபோட்டு
காமவெறியாளர் கசக்கிப்
போடுகின்றார், கன்னியரை,
கற்பினை அழித்த பின்னர்

கயவர் கூட்டம்.
நலிகின்றார் சிலபேர்கள்
நடைப்பிணமாய்!
நாராசந்தனில் சிலரும்
உழலுகின்றார்
சிலரோ. மானமழிந்தபின்
சாவுவேண்டி,
கூர்வாளோ, குளம் ஆறோ
கொடுவிஷமோ
இறுக்கி உயிர்பிரிக்கவல்ல
முழக்கயறோ தேடுகிறார்.
பசிக்காக இறைதேடும்
பாவிநாங்கள்; பரமனே! கேள்,
அங்கே, உருசிக்காகவே
புரிகின்றார், கொலைகளவுகாமம்.
அடவியிலா ஐயனே! அவரெலாம்
இருக்கின்றார்?
குருதிகுடிப்பது கொன்று தின்பது
எமதியல்பு; மறுக்கவில்லை;
எம்இயல்பு மாறிட, நன்மை
தீமை உணர்ந்திட
அறமறிய அன்பு நெறிஅறிய
பண்பறிந்து ஒழுக,
அறிவுகொளுத்த நீர்
அனுப்பிய வள்ளுவர்,
நாங்கள் உய்ந்திடகாடாவந்தார்!
நாட்டிடை நவின்றார்!!
கருத்திலே துளிர்த்திடும் தீயன
கருகி வீழ,
தக்கன கூறிடும் நூற்களைப்
படிப்பது, காட்டிலா? நாட்டினில்!
கட்டுதிட்டம் காத்திட
கண்ணீர் துடைத்திட,
அரசு அமைந்ததெங்கே?

நாட்டிலே!
ஐயனே! சென்று வருகின்றீர்
நல்வழி காட்டிட; அடிக்கடி
அனுப்பி இருக்கின்றீர்
அடியார்கள் பற்பலரை!
இத்தனைக் கனிவு இவர்க்காக!
இத்தனை முயற்சி இவர் பொருட்டு
இம்மி அளவேனும் எமக்காக
என்றுண்டா? கோபியாதீர்!
எமது இயல்பினை யாம
தேடிப் பெறவில்லை; வந்தது.
ஆங்கவர்கள் நல்லியல்பு
பெற்றிட பெருமுயற்சி
செய்கின்றீர்.
அவரோ, ஐயா! உமைத்
துளியும் மதியாமல்
உணர்ச்சிகள் ஆட்டிவிக்கும்
வழிப்படி எலாம் நடந்து,
ஏழை எளியோர்கள், நோயாளி
கொலையாளி,
விபசாரி, சூதாடி, கள்ளன்
கட்குடியன்
காமவெறி பிடித்தோன்
பொய்யன் புரட்டனெனும்,
பொல்லாத விலங்குகளாய்
ஆகிக் கிடக்டன்றார்!
பூஜைபல செய்கின்றார்
என்பதற்கா
புனிதனே! இதை மறந்தாய்!
ஆடகப் பொன் மணி முத்து
தருகின்றாய் நீ
அதில் கொஞ்சம் உன சென்று
ஆக்குகின்றார்!
இந்த அபின் அன்புக்கா
அநீதி வளரவிட்டீர்?

காடெமக்கு நாடவர்க்கு
எனு முறை இனி இருக்கலாமோ!
ஏதோ, விலங்குகளாய்ப்
பிறந்துவிட்டோம்.
கொலைத் தொழிலில்
ஈடுபட்டோம் என்றுணர்ந்து
கூனி நடக்கின்றோம்.
கையையும் காலாய்க்கொண்டு.
அவர்கள் தாமோ நிமிர்ந்து
நிற்கின்றார்; அச்சமற்று.
என் செய்ய இனி எண்ணம்
என்றது புலியுந்தானே!
முப்புரம் எரித்த மூர்த்தி
முறுவலையும் இழந்து
கப்பிய கவலையோடு
செப்பினான் இதனைத்தானே.
புலியே! உன் உணர்ச்சி
உரைதன்னைக் கேட்டேன்.
பொய்யல்ல! மெய்! அதனை
மறுட்பேன் அல்லேன்.
மானிடரின் லோகமது
நீ கூறியபடியே உளது
எத்தனையோ செய்து பார்த்தேன்
எதிலும் வெற்றி இல்லை
தாமாக அழியட்டும் தரம் கெட்டு
என விட்டுவிட்டேன்,
இனி இதனைச் சற்றே
கேளாய், தவப்புலியே!
நாடுதான் என் வழி
நடவாதெனினும்
காடாகிலும் என் கட்டளை
கேட்டிடும் என்றே
கருத்திலே களிப்புடன்
கைலை உள்ளேன்.
இனிக் காடும்எனைக் கைவிடும்

என்றாகிவிட்டால்
கடவுள்எனு நிலை எதற்கு?
கவலை எனக்கதுவே.
காலத்தின் கோலம் என்றார்
கண்களில் நீர் ததும்ப.
கால் வீழ்ந்து புலியும்
அங்கு கூறிற்று.
ஐய ! அறிந்துருகுகின்றேன்
உமதுநிலை! அஞ்சற்க!
தெளிவுபெறக் கேட்டேன்;
கட்டினை மீற அல்ல
உள்ளொன்று புறமொன்று
இஃதுயாம் அறியா ஒன்று
உறுதியாய் உரைநம்பிக்
கைலை செல்லும்.
இனியும் காடது இருந்திடும்
உம் கட்டளைப்படியே.
காசுபணந்தான் இல்லை,
கோயில் குளம் அமைக்க!
புலியின் உரை கேட்ட
புனிதனவன் முகமலர்ந்து.
கவலைதீர்த்த கடும்புயலே
வாழ்க!
நீடு வாழ்க!
நாடு கைவிடினும், காடுளது!
களிப்புற்றேன் மிகவும் என்றார்
காடுடைப் பொடிஅலவோ
பூசிடுவதுமய்யா!
ஆடையும் எமதினம்
அளித்தது அன்றோ!
சிரித்தார் சிவனார், சிரித்தேன்
நானும்
தூக்கந்தில் என்னடா இத்தனை
சிரிப்பென
கட்டுஎன் அன்னை எனைத்
தட்டி எழுப்பினார்;
அத்தனையும் கனவுதானா
ஆயுனுமென் சுவைத்தேனே
பயனும் உண்டே சிந்தித்தால்
என்றெண்ணிச் சென்றேன்
பொழுது புலருமுன் எழுந்து
சென்ற
பொற்கொடியின்,
விற்புருவம் விழி மலர்கள்
கனி இதழைக் காணத்தானே.

★

---



ஜனநாயக நாட்டில் பிரசாரம் என்பது ஒரு கலை, ஆகையினால், கலையைக் கலைக்காகப் பயன்படுத்த வேண்டும் என்று சொல்லுகின்ற நேரத்தில் அது பிரசாரத்திற்காகப் பயன்படுமானால் அது கலை இலக்கணத்திற்கு அப்பாற்பட்டதல்ல என்பதற்காக நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்,

இன்னொன்று—

பிரச்சாரம் என்பது கெடுதல் என்று இதுவரையில் யாரும் சொல்லவில்லை. பிரசாரம் என்பதன் உட்பொருளே, தான் விரும்புகின்ற கருத்தை, மற்றவர்கள் விரும்புகின்ற வகையிலேயும், நம்புகின்ற முறையிலேயும் பல்வேறு வகைகளிலே எடுத்துச் சொல்லுவதுதானே ? இதுவே பிரசாரம் என்ற சொல்லுக்கு இலக்கணமாகும்.

—பேரறிஞர் அண்ணா

# வேற்றுமையில் ஒற்றுமை நின்று நிலைத்திட . . .

-மு வயலூர்க்குமரன்-

பேரறிஞர் அண்ணா அவர்கள், 'திராவிட நாடு' என்ற இலட்சியத்தை வடித்தெடுத்த சிற்பியாவார். அந்த இலட்சியத்தைத் தமிழ் மக்களிடையே பரப்பிடும் பணியில் அவர் பெருமளவு வெற்றியும் கண்டார். ஓட்டு முறையிலேயே அந்த இலட்சியத்தை அடைந்துவிட முடியுமென அவர் உளமார நம்பினார்.

அண்ணாவின் நம்பிக்கைக்கு மாறான சில சூழ்நிலைகள் உருவானபோது தமது உயிர்க் கொள்கையான 'திராவிட நாடு' கொள்கையைக் கைவிட்டதாக அவர் அறிவித்தார். தமது ஒரு இணையற்ற வாதத் திறமையால், இந்தப் புதிய சூழ்நிலையையும் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளுமாறு செய்தார்.

இப்போது 'திராவிட நாடு' என்பது வரலாற்றில் மறைந்து கொண்டதொரு பெயராகி விட்டது.

'திராவிட நாடு' கொள்கையை உயிர் மூச்சாகக்கொண்டு பல்லாண்டுக் காலம் மக்களை அதற்காகத் தயார்படுத்தி வந்த அண்ணா, ஒரு காலக் கட்டத்தில் அதனைக் கைவிட்டாரென்றால் அந்தக் கொள்கை தவறான அடிப்படையில் உருவானதென்று அவர் உணர்ந்து கொண்டார் என்று கூற இயலுமா? இயலாது ஒருக்காலும் அவ்வாறு கூற இயலாது.

"'திராவிட நாடு' கோரிக்கையைத்தான் நாங்கள் கைவிட்டோமே தவிர, அதைக் கேட்டதற்கான காரணங்கள் அப்படியே உள்ளன" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ் நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்னர் கூடக் கூறினார்.

அறிஞர் அண்ணா உலக வரலாற்றை முற்றாகக் கற்றுணர்ந்தவர். நாடு, மொழி, இனம் ஆகியவற்றின் அடிப்படையில் அந்தந்த மக்களிடம் இயல்பாக எழும் உணர்வுகள் பற்றித் தெளிவாக அறிந்தவர். 'திராவிட நாடு' இலட்சியத்தை மக்களிடம் பரப்பிட அண்ணா

அன்று என்னென்ன வாதங்களை எடுத்து வைத்தாரோ, அவையெல்லாம் உயிரோட்டமுள்ளவை என்ற உண்மை சோவியத் ரஷ்யாவும், செக்கோஸ்லோவேகியாவும், யூகோஸ்லாவியாவும் இன, மொழி அடிப்படையில் பல்வேறு தனித்தனி நாடுகளாகப் பிரிந்து விட்டதிலிருந்து தெளிவாகிறது. அது மட்டுமின்றி, உலகில் பல்வேறு நாடுகளில் வாழும் பல்வேறு தேசிய இனங்கள் தத்தமது தனித்தன்மையை நிலைநாட்டிக் கொள்வதற்காகப் போராட்டங்கள் நடத்தி வரும் செய்திகளையும் நாம் காண்கிறோம்,

பெரும்பான்மை இனமாகவுள்ள மக்களுடன் சிறுபான்மை இனத்தினர் கூடி வாழும் நாடுகளில், பெரும்பான்மையினர் சிறுபான்மையினர்மீது தமது மொழி, பண்பாடு ஆகியவற்றைத் திணித்துச் சிறுபான்மையினரின் தனித்தன்மையை அழித்திட முயலும்போதுதான் சிறுபான்மையினர் கிளர்ந்தெழும் நிலை ஏற்படுகின்றது.

ஒரு தேசிய இனத்தின் மொழியும் பண்பாடும் எவ்வாறு உருவாகின்றன, அந்த மக்களின் வாழ்வோடு அவை எவ்வாறு பின்னிப் பிணைந்து கிடக்கின்றன என்பதை அறிஞர் அண்ணா கீழ்க்கண்டவாறு விளக்குகிறார்:

''ஒவ்வோர் இனத்துக்கென ஒவ்வொரு மொழி இயற்கையாக அமைந்துள்ளது அந்த மொழி வாழ்க்கை வழியை அந்த இன மக்களுக்கு அமைத்துத் தருகிறது. ஓராண்டு, ஈராண்டல்ல-பல தலை முறைகளாகச் சிறுகச் சிறுகச் சமைக்கப் பெற்றுக் கூட்டாகி ஒரு பேருரு ஏற்பட்டு விடுகிறது. அந்த மக்கள் உலவும் நாடு, வேட்டையாடி மகிழும் காடு, நீந்தி விளையாடும் ஆறுகள், உழுது பயன்காணும் வயல்கள், உழைப்புடன் மதி நுட்பத்தை இழைத்திடும் தொழிலிடங்கள், குலவி இன்புறும் மனைகள் - இங்கெல்லாம் எண்ணங்களை எடுத்துக் கூறியும் பிறர் கூறிடக் கேட்டும், கலந்துரையாடியும் கருத்துக்களை உருவாக்கிப் பின்னர் அவற்றைக் காப்பாற்றிடவும் வளர்த்திடவும் வழிவகை கண்டறிகின்றனர். இந்தச் சீரிய செல்வத்தை மக்கள்பெற உறுதுணையாக நிற்பது அவர்க்கென அமைந்த மொழி. எனவேதான், மொழியென்பது வாழ்க்கை வழியினை அமைத்தளிக்கிறதென்று அறிவாளர் கூறுகின்றனர்.

தட்ப வெப்ப நிலைக்கேற்ப மொழி உருவாக்கப்படுகிறது. பலப் பல நூற்றாண்டுகளாக, ஒரு குறிப்பிட்ட மக்கட்தொகை அந்த மொழி மூலம் தங்கள் எண்ணங்களை எடுத்தியம்பு



2172 J4 N92ICN N93

வதாலும், கேட்டுப் பயன் பெறுவதாலும் கருத்துக்கள் உருவாகுகின்றன. அந்தக் கருவூலம் அந்த இனம் தேடிப் பெற்றது. பிறகு உலகுக்கு அளிப்பதுமாகும்.''

'திராவிட நாடு'—26-6-1960

இவ்வாறெல்லாம் ஒரு மக்கள் கூட்டத்தின் வாழ்வோடு பின்னிப் பிணைந்து நிற்கும் மொழியையும் பண்பாட்டினையும், பெரும்பான்மை இனத்தவர் தமது ஆதிக்க வேட்கையினால், அழித்திட முனையும்போது, சிறுபான்மையாக இருக்கும் இனத்தினர் தமது தனித்தன்மையைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு வீறுகொண்டு எழுவது இயல்பேயாகும். அதுதான் தேசிய உணர்வின் எழுச்சி என்று அறியப்படும். இத்தகைய எழுச்சியை அடக்கு முறையினால் நீண்ட காலம் அழுத்தி வைத்திட இயலாது என்பதற்கான சான்றுகள் தாம் இன்றைய ரஷ்யக் குடியரசுகளும் மூன்றாகப் பிரிந்து பட்ட யூகோஸ்லாவியாவும் இரண்டாகப் பிரிந்து நிற்கும் செக்கோஸ்லோவேகியாவு மாகும்.

எனவே பல்வேறு தேசிய இனங்கள் கூடி வாழும் ஒரு நாட்டில் பெரும்பான்மை இனத்தவர் மிகுந்த அடக்கமுடன் நடந்துகொள்ள வேண்டும். அவர்களுடைய நடவடிக்கைகள் சிறுபான்மை இனத்தவரின் உள்ளத்தில் ஐயம் எழுகின்ற வகையில் அமையுமானால், ஒருமைப்பாடு, ஒற்றுமை என்பதெல்லாம் தேடிப்பார்க்க வேண்டிய கோட்பாடுகளாகி விடும்.

# அண்ணாவின் பதில்

தமிழ் நாடு சட்ட சபையில் தமிழக முதல்வர் காங்கிரஸ் இரண்டாக உடைந்து விட்டதா என்று கேட்டார். அதற்கு எதிர்க் கட்சித் தலைவா திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் கீழ்கண்ட பதிலை கூறினார்.

இந்த அவையில் அண்ணா உறுப்பினராக இருந்தபோது நடந்த சம்பவத்தை தெரிவிக்க விரும்புகிறேன். அப்போது அமைச்சராக இருந்த சி. சுப்பிரமணியம், தி.மு.க.வில் உள்ள பிரிவைப் பற்றி எனக்குத் தெரியாதா? என்று கேட்டார். அப்போது அண்ணா, அவரைப் பார்த்து, அருள் கூர்ந்து நான் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் பெரியவர். பெரிய இடத்தில் இருப்பவர். இப்படி பேசுவது முறை அல்ல. எல்லா கட்சியிலும் கருத்து வேறுபாடு இருக்கும். அதை பிளவு என்று கூறிவிட முடியாது. இப்படி பேசுவது முறை அல்ல என்று கூறினார்.

அந்த அண்ணா, சி. சுப்பிரமணியத்துக்கு கூறியதையே உங்களுக்கு பதிலாக கூறுகிறேன்.

மாலைமுரசு—பிப் 1993

# திரட்டு

27—1—93 அன்று தமிழ்நாடு தையற்கலைஞர்கள் முன்னேற்ற சங்கம் கோட்டையை நோக்கி கோரிக்கைப் பேரணி நடத்தியது. அவர்கள் கீழ்கண்ட கோரிக்கைகளை நிறைவேற்றித் தரும்படி அரசை வேண்டி இந்தப் பேரணியை நடத்தினர்.

- 58 வயதிற்குமேல் தையற்தொழிலாளர்கள் ஒய்வு பெறும்போது அவர்களுக்கு ஓய்வுக்கான ஊதியம் ரூபாய் 2000 வரை கொடுக்க வேண்டும்.
- அனைத்து ஏழைத் தையற் தொழிலாளர்களுக்கும் தையல் இயந்திரம் வாங்க வங்கிகளில் இருந்து கடனுதவி வழங்கவேண்டும்.
- கிராமத்தில் வசிக்கும் வறுமையில் சிக்கித் தவிக்கும் தையற் தொழிலாளர்களுக்கு வீடு கட்ட இலவச வீட்டு மனை பட்டா வழங்கவேண்டும்.
- சலவைத் தொழிலாளர்களுக்கும், முடி திருத்துவோருக்கும் இலவச கருவிகள் வழங்குவதுபோல் தையற் தொழிலாளர்களுக்கும் இலவச கருவிகள் வழங்க வேண்டும்.
- அத்தியாவசிய பொருட்களான மிஷின், நூல், பட்டன், கேன்வாஸ், ஜிப் மற்றும் பல பொருட்களின் விலையேற்றத்தை குறைத்து தொழிலாளர்களின் வாழ்க்கையை உயர்த்தவேண்டும்
- மஹாராஷ்டிர மாநிலத்தில் தையற் தொழிலாளர்களுக்கு மின் சாரக்கட்டணம் சலுகை கொடுப்பதுபோல தமிழ்நாட்டிலும் மின் சாரக் கட்டண சலுகை அளிக்கவேண்டும்.
- கிராமப்புர ஏழைத் தையற் தொழிலாளர்களுக்கு 5 சென்ட் வீட்டு மனை இலவச பட்டா அளித்தல்.

- வீடு கட்ட கடனுதவி.
- குடிசை மாற்று வாரியத்தில் 25 % ஒதுக்கீடு.
- தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் 5% வீடுகள் ஒதுக்கீடு.
- உயர்நிலைப் பள்ளிகளில் தையற்கலை கட்டாயபாடமாக்குதல்.
- ஒவ்வொரு மாவட்டத்திலும் தையற் கலைக் கல்லூரிகள் திறப்பு.
- தையல் கலையை தொழிலாக அங்கீகரித்தல்.
- கேரள அரசு அளிக்கும் தொழிலாளர் நலத்திட்டங்களை தமிழகத்திலும் அமுல் செய்தல்.

# தந்தை பெரியார் தமிழ் இசை மன்றம்- தொடக்கவிழா

நல்ல தமிழில் இயற்கை எழில்களையும், தமிழரின் வீரத்தையும், அன்பையும் மானமிக்க சமத்துவ வாழ்வினையும், வரலாற்றினையும், நேர்மையையும், நீதிநெறிகளையும், தமிழ்நாட்டுப் பற்றையும் மொழியில் ஆர்வத்தையும் ஒற்றுமையையும், கட்டுப்பாட்டையும் எடுத்துக் காட்டும் பாட்டுக்களையே பாடுமாறு செய்தல் வேண்டும் எனும் நோக்கத்துடன் தந்தை பெரியார் தமிழ் இசை மன்றம் சென்னையில் தொடங்கப்பட்டது. 19—1—93 முதல் 21—1—93 முடிய சென்னை பெரியார் திடலில் இசைவிழா நடைபெற்றது. முதல்நாள் திரு. T. L. மகராசன், இரண்டாம் நாள் திரு. தேனிசை செல்லப்பா, மூன்றாம் நாள் திரு. T. K. S. கலைவாணன் ஆகியோர் இசை நிகழ்ச்சிகளை நடத்தினர். நாதசுர நாயகி மதுரை எம்.எஸ். பொன்னுத்தாய், திருப்பூர் சகோதரிகள் எஸ். பி. இராமு— எஸ். பி. சாரதா, கலைமாமணி ஏ.கே. காளீசுவரன் ஆகியோர் பாராட்டப்பட்டனர். மூன்று நாள் நிகழ்ச்சியிலும் தமிழினக் காவலர், திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் மானமிகு. கீ. வீரமணி எம்.ஏ பி.எல். அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

கலைமாமணி ந மா. முத்துக்கூத்தன், திரு. நா. அருணாசலம் திரு. சா.அ. சௌரிராசன் ஆகியோர் விழாவை சிறப்பாக அமைத்து நடத்தினர்.

# கண்ணியம் குலோத்துங்கன் இல்லத் திருமணம்

திருமதி. அருள்மணி குலோத்துங்கன், கண்ணியம் திரு. ஆ. கோ. குலோத்துங்கன் தம்பதியரின் மகள் செல்வி. கு. சோழ இளவரசி பி.எஸ்.சி. அமரர் கோ. தியாகராசன் அவர்களின் செல்வன். பார்த்தி பன் எம்.எஸ்ஸிபி.எட். ஆகியோர் திருமணம் சிதம்பர் ஜீ. எம். வாண்டையார் திருமண மண்டபத்தில் முத்தமிழ் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் தலைமையில 28—1—93 அன்று சிறப்புற நடந்தேறியது. பேரறிஞர் அண்ணா இலக்கியப் பேரவையின் தென் ஆற்காடு மாவட்ட புரவலர். பதிப்புச்செம்மல், பேராசிரியர் டாக்டர். ச. மெய்யப்பன், டாக்டர். சிஎன்ஏ. பரிமளம் திரு. ஆர் மார்கபந்து பி.ஏ. பி. எல். ஆகியோர் முன்னிலை ஏற்று வாழ்த்துரைத்தனர். தொடக்கத்தில் தி ந. கோ. மாணிக்கசுந்தரம் சிண்டிகேட் வங்கி அனைவரையும் வரவேற்றார். பேராசிரியர் டாக்டர். பொற்கோ, பேராசிரியர் கே. என். இராமசந்திரன் எம் ஏ., பேரறிஞர் அண்ணா இலக்கியப் பேரவையின் தென்ஆற்காடு மாவட்ட அமைப்பாளர் செந்தமிழ்க் காவலர் சிதம்பரம் மயில்வாகனன், வழக்கறிஞர் வ. உ. சி. ஆ. சண்முகசுந்தரம், டாக்டர் முகிலை. இராசபாண்டியன் ஆகியோர் வாழ்த்துரையாற்றினர்.

# அண்ணன் பி.ஏ.எஸ். இல்லத்திருமணம்

தந்தை பெரியார்—அண்ணா சிந்தனையாளர் பேரவைத்தலைவர் புன்செய் புளியம்பட்டி P.A. சாமிநாதன் Ex.M.P. திருமதி. சம்பூரணம் சாமிநாதன் அவர்களின் திருநிறைச்செல்வன் பி. எஸ். அன்பு எம்.பி.ஏ., திரு. பி. எம். அங்குசாமி திருமதி. சீதாலட்சுமி அங்குசாமி அவர்களின் திருநிறைச்செல்வி பி. ஏ. இராணி ஆகியோர் திருமணம் 5—2—93 அன்று கோபிசெட்டிப்பாளையம் முத்துமகால் மண்டபத்தில் நடந்தேறியது. மானமிகு கீ. வீரமணி அவர்கள் தலைமையேற்று மணவிழாவை நடாத்தி வைத்தார். பேராசிரியர் சே. சு. பழனிச்சாமி, திரு. T. R. ராமசாமி I.A.S. சிந்தனைச் செம்மல்கு.ச.ஆனந்தன், திரு. வி. மாயவன், Ex.M.P. கவிஞர் பண்ணன், முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன், டாக்டர் சி என்.ஏ. பரிமளம், கோவை மு. இராமநாதன், தி. மு. க. அவைத் தலைவர் திரு. சானகிராமன், திருச்சி மாவட்டதி.மு க.செயலாளர் திரு. செல்வராசு ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். திருமதி சம்பூரணம் சாமிநாதன், செல்வன் P. S. அன்பு இருவரும் நன்றியுரை ஆற்றினர். விழா முடிவதற்கு முன்னர் புலவர் பண்ணன் அவர்கள் எழுதியுள்ள 'நலம் தரும் கொள்கை நாத்திகமே' எனும் நூலை வெளியிட ரூ. 10,000 மானமிகு கி. வீரமணி அவர்

ளாலும் கோவை பொறியியல் பயிலும் மாணவன் S. பழநிக்கு ரூ. 5000 முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன் அவர்களாலும், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் நான்காமாண்டு பயிலும் மாணவன் அன்பழகனுக்கு ரூ, 2,500 டாக்டர் சி.என்.ஏ. பரிமளம் அவர்களாலும் PAS அறக்கட்டளையிலிருந்து வழங்கப்பட்டது.

# பேரறிஞர் அண்ணாவுக்கு மக்களிடமிருந்த நம்பிக்கை!

—தோப்பூரார்—

1967-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கு முன்னர் சென்னை விருகம்பாக்கத்தில் மாபெரும் மாநாட்டைக்கூட்டி பல அதிசயமான நிகழ்ச்சிகளை மக்கள் மனதில் பசுமையாக பதியும்வண்ணம் செய்தார்.

அம்மாநாட்டில்தான் அண்ணா ராஜாஜியையும், காயிதேமில்லத்தையும் கலந்து கொள்ளும்படிச் செய்ததோடு. ராஜாஜி அவர்கள் வாயிலிருந்து ''படுத்துக்கொள்வது சுலபம் ஆனால் ஜெயிப்பதுதான் கஷ்டம்'' என்று அன்றைய முதல்வராக இருந்த காமராஜருக்கு பதில் வந்தது. அது பின்னர் உண்மையாகவும் ஆயிற்று.

அம்மாநாட்டில்தான் திரு. சி.பா. ஆதித்தனார் தி.மு.க. வில் இணைந்துவிட்ட நற்செய்தியை அண்ணா வெளியிட்டார். அதுவரை திராவிட இயக்கங்களை எதிர்த்துவந்த ம.பொ.சி.யின் தமிழரசுக் கட்சியையும் கூட்டணியில் ஒரு அங்கமாக அண்ணா இணைத்துக் கொண்டார்.

பிரஜா சோஷியலிஸ்ட் கட்சி, கம்யூனிஸ்டு கட்சி போன்ற கட்சிகளையும் கூட்டணிக்கு ஆதரவாக இணைத்துக் கொண்டார்.

இவ்வாறு மூலைக்கொன்றாக சிதறிக்கிடந்த எதிர்கட்சிகளை எல்லாம் அண்ணா காங்கிரசுக்கு எதிராக ஒருங்கிணைத்து மகத்தான வெற்றி கண்டார்!

1967-ஆம் ஆண்டு தேர்தலின்போதுதான் காங்கிரஸ்காரர்கள் ஒரு சுவரெரட்டியை தமிழகமெங்கும் அச்சிட்டு ஒட்டினார்கள்! அச்சுவரொட்டியின் மகாத்மியம் என்ன தெரியுமா? ஒரு கழுதையின் மீதமர்ந்து பேரறிஞர் அண்ணாவும், காயிதேமில்லத்தும், ராஜாஜியும் ஊர்வலம் வருவதுபோல் இருந்தது! அச்சுவரொட்டியைக் கண்டு அண்ணா கோபப்படவில்லை, கொதிப்படயவில்லை. ஆனால் மக்கள் அச்சுவரொட்டியைக் கண்டு ஆவேசமடைந்தார்கள். இத்தகைய சுவரொட்டியை அச்சடித்து ஒட்டிய காங்கிரசுக்கு சரியான பாடம் புகட்டுவது என்று தீர்மானித்தார்கள். காங்கிரசை வீழ்ச்சியடையச் செய்தார்கள்! தி.மு.க. கூட்டணியை கோட்டைக்கு அனுப்பிவைத்தார்கள்!

# சுவையான பிரஞ்சுப் பக்கங்கள்!

ஆசிரியர் : பேராசிரியர் க. சச்சிதானந்தம், M.A.

நூல் மதிப்புரை வழங்குபவர் : தோப்பூர் திருவேங்கடம்.

பேராசிரியர் சச்சிதானந்தம் அவர்கள் அரிதின் முயன்று பிரஞ்சு மொழியினின்று மொழி பெயர்த்து தமிழில் பல நூல்களை எழுதியுள்ளார். பிரஞ்சு மொழியினின்று பல அறிவு பூர்வமான கதைகளை தமிழில் அளித்துள்ளார்.

இவர் எழுதியுள்ள ''சுவையான பிரஞ்சுப் பக்கங்கள்'' என்ற நூல் மிகவும் அற்புதமானது! கருத்து களஞ்சியமாகத் திகழுகின்றது. பற்பல புத்தம் புதிய கருத்துரைகளை அரிதின் முயன்று, பிரஞ்சு மொழியினின்று பல நூல்களைப் பயின்று சாறு பிழிந்து அளிக்கிறார். பூமியினின்று அகழ்ந்தெடுத்து சலித்தெடுத்து பொன்னை மட்டும் அள்ளித் தரும் வள்ளலைப் போன்றவர் நமது பேராசிரியர் திரு. கா. சச்சி ஆவார்கள்!

பிரஞ்சு மொழி எனும் களஞ்சியத்திலிருந்து நல்ல மணிகளை, பொறுக்கு மணிகளை நமக்கு கொடுத்து மகிழ்வதே அவர் தம் வாழ்க்கையின குறிக்கோளாகக் கொண்டு உழைத்து வருகிறார்!

இளமையில் காஞ்சி பல்கலைக் கழகத்தில் பயின்றதாலேயே தமிழில் ஆர்வம் கொண்டாராம். ஆம் அறிஞர் அண்ணாவின் வார ஏடாகிய 'திராவிட நாடு' 'காஞ்சி' ஆகியவற்றைப் படித்து தமிழார் வித்தை வளர்த்துக் கொண்டாராம். புரட்சிக் கவிஞரின் கவிதைகளையும் ஆர்வத்துடன் படித்தவர்.

''பிரஞ்சுப் பக்கங்களைப் புரட்டினால் நாம் தெரிந்து கொள்ளக் கூடியது:—''நீண்ட காலமாக மக்கள் ஆதரவைப் பெற்ற நூல்களைப் படியுங்கள். குறைகூற முடியாத நல்ல பெயரைப் பெற்ற நூல்களைப் படியுங்கள். இப்படிப்பட்ட நூல்கள் மிகக் குறைவாகவே உள்ளன என்று வொல்தேர் (Voltaire) என்ற அறிஞர கூறுவதையும்; ''உங்கள் அறிவுக்கு ஒரு பாடத்தைக் கற்பித்த பிறகுதான் அது உங்களை விடும். புரிந்து கொள்ளுதல் நெருங்குதல் ஆகும். ஒரு நல்ல நூலைத் திறத்தல், அதில் மகிழ்தல், அதில் ஆழ்தல், தன்னை மறத்தல், அதை நம்புதல் எத்தகைய விருந்து'' என்று விக்தோர் உய்கோ (Victor Hugo)வின் அறிவுரையையும் தாய் நாடு என்றால் என்ன? இதைப் பற்றி நீ இதுவரை நினைத்துப் பார்த்திருக்க மாட்டாய்

அல்லவா? உன்னைச் சுற்றியுள்ளவை, உன்னை வளர்த்தவை, உனக்கு உணவு கொடுத்தவை. உனக்கு விருப்பம் தருபவை எல்லாம் தாய் நாடு தான்'' என்று எ. சுவேஸ்தர் என்ற சிந்தனையாளரின் சிந்தனையையும் கொடுத்து மகிழ்கிறார்.

லூய்பஸ்தேர் என்ற விஞ்ஞானியின் பெயர் ஒரு சிற்றூருக்கு வைக்க தீர்மானித்து ஆளுநர் அறிக்கை வெளியிட்டமைக்கு அவர் கூறியதாவது ''அந்த ஊருக்கு என் பெயரை வைத்தது தங்கள் பெருந்தன்மையை காட்டுகிறது. அச்சிற்றூரில் ஒரு மாணவன் அப் பெயரின் காரணத்தைக் கேட்கக்கூடும்.'' அது பிரான்சு நாட்டை மிக அதிகம் நேசித்த ஒரு பிரஞ்சுக்காரனின் பெயர் என்று சொல்லு வதை விரும்புகிறேன். அம்மாணவனும் தன் நாட்டுக்கு தன்னால் முடிந்தவரை தொண்டாற்றி மனித சமுதாயத்து நலத்துக்குத் தன் பங்கை ஆற்றமுடியும்'' என்பன போன்ற பற்பல மூத்துக்களை கோர்த்து ஆரமாக்கி வழங்குகிறார் பேராசிரியர் க. சச்சி அவர்களை வெல்க அவர் முயற்சி!

நூலின் பெயர்: சுவையான பிரஞ்சுப் பக்கங்கள்—தமிழில் பேராசிரியர் க. சச்சிதானந்தம், M.A. கிடைக்குமிடம்: சாரதா பதிப்பகம், 90, அம்பலத்தாடையார் தெரு, புதுச்சேரி-605 001. விலை ரூ. 16-00

---



மலர் தரும் செடி, கொடிகளும், கனிதரும் மரங்களும் கொண்டதாகவே தோட்டங்கள் இருத்தல் வேண்டும். பூங்காக்கள் கொண்ட தாகவே புவி இருக்க வேண்டும் என்று விரும்பு வதும் கூறுவதும் தவறு அல்ல-அந்த நிலைக் காகப் பாடுபடுவது தேவையானதுங்கூட ஆனால் மலர்த் தோட்டத்துக்குப் பக்கத்திலே கள்ளிக் காளான் முளைத்து விடுகிறது. பக்கத்திலா? தோட்டத்திலேயேகூட! என் செய்யலாம்?

கனி குலுங்கும் மரத்தைக் கருமந்தி பிடித்தாட்டுகிறது. கடுங் காற்று கிளம்பி மரங்களையே பெயர்த்தெடுத்து விடுகிறது! என் செய்வது?

கேடுகள் முளைக்கும்போது அவற்றினை எதிர்த்து வீழ்த்தி நல்லனவற்றைப் பாதுகாத்துத் தீரவேண்டும். அது மட்டும போதாது-கேடுகள் மீண்டும் எழாதபடி பாதுகாப்பு ஏற்படுத்திக் கொண்டாக வேண்டும். இது தேவையானதுதான். இதனை வற்புறுத்த, விளக்கம் அளிக்க, இதற்கு ஆதரவு திரட்டிடத் தேவையா?-எவரும் இசைவரே என்று கூறத் தோன்றுகிறது.

ஆனால், இதிலே உள்ள சிக்கல் யாதெனில் களைந்தெறியப்பட வேண்டியகேடு எது - என்ன இலக்கணம் கண்டு ஒன்றினைக் கேடு என்றுகொள்ள முடிகிறது என்பது தான்...! —பேரறிஞர் அண்ணா

# அண்ணாவின் தன் வரலாறு

டாக்டர் பரிமளம்

என் சிறை அனுபவங்களிலே சில உனக்குக் கூறுகிறேன்—உன் சிறை அனுபவத்தை எனக்குக் கூறிடுவாய் என்ற நம்பிக்கையுடன்.

'நாலு மாதம்' என்றார் மாஜிஸ்டிரேட்! நாலு மாதம் என்று லேடி டாக்டர் கூறிடுவது கேட்டு மகிழும் ஆரணங்கு போலானேன். இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி 1938- ஆச்சாரியார் ஆட்சிக் காலம்-என்மீது, குற்றம் புரியும்படி தூண்டி விடுதல் உடந்தையாக இருத்தல் எனும் குற்றங்கள்—வழக்கு நடைபெற்று, அன்று சென்னை எழும்பூர் கோர்ட்டில், நாலு மாதம் என்று தீர்ப்பளிக்கப்பட்டதும், கொள்கைக்காகக் கஷ்ட நஷ்டம் ஏற்கும் உள்ளம் இவனுக்கு உண்டு என்று இயக்கமும் இயக்கத்தின் போக்கைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த பொதுமக்களும் நல்ல தீர்ப்பு அளித்து விட்டனர்—பரீட்சையில் தேறிவிட்டோம் என்றெண்ணினேன். விவரிக்க முடியாததோர் மகிழ்ச்சி—வெற்றி பெறுகிறோம் என்ற நம்பிக்கை.

சென்னைச் சிறையில், பெரியாருடன் ஒரே வரிசைக் கட்டிடத்திலே தங்கியிருக்க நேரிட்டதை ஒரு வாய்ப்பாகவே கொண்டேன்.

குற்றாலத்துக்கோ, கொடைக்கானலுக்கோ செல்பவர்கள், உள்ளே நுழைந்ததும், தனக்கு வேண்டியவர்கள்—இருப்பது கண்டால் எவ்வளவு மகிழ்ச்சி அடைவார்கள்—எனக்கு, உள்ளே நுழைந்ததும் வந்து விட்டாயா? வா! வா! ஆறா, எட்டா? நாலா, மூன்றா?' என்று கேட்டபடி நண்பர்கள் என்னிடம் அன்புடன் வந்தபோது, அது போன்ற மகிழ்ச்சி ஏற்பட்டது.

மகிழ்ச்சியைத் தொடர்ந்து அனுபவிக்க முடியவில்லை. காரணம் வீட்டை விட்டு இந்தக் கூட்டுக்குள்ளே வந்து விட்டோமே என்ற கவலையல்ல; போட்டுக்கொள்ளப் பொடியில்லை! என்ன செய்வேன்? உனக்குத் தெரியுமே, தம்பி! நான் அந்தக் கெட்ட பழக்கத்துக்கு ஆட்பட்டு அல்லற்படுவது; கடை வீதியா, சண்முகம் கொண்டுவா, அம்பாள் வாங்கிவா என்று சொல்ல? சிறை!!

என் சங்கடத்தை அறிந்துகொண்ட அடிகள் ''இது தானே வேண்டியது! இதோ'' என்று கூறி ஒரு சிறு காகிதப் பொட்டலம் கொடுத்தார்—பொடி!! நெடி குறைந்துபோன நிலை! பக்குவமாகத் தான் மடித்து வைத்திருந்தார்; ஆனால், காகிதத்தில் இருந்ததால் பொடி பதம் கெட்டுக் கிடந்தது-எனினும் எனக்கிருந்த பசி, அவல்

சண்முகம் இதனிடம் என்ன செய்யும் என்று களிப்புடன் கூறச் செய்தது இந்தப் பொடிப் பொட்டலத்தை நான் என்றுமே மறப்பதற்கில்லை முதல் சிறை அனுபவம்—மூக்குப் பொடிக்கே அலைய நேரிட்டது முதல் அனுபவமல்ல!

நாலு மாதமும் நாங்கள் அங்கு தமிழ்! தமிழ்! தமிழ்! என்ற உணர்ச்சி வயமாகி இருந்து வந்தோம்; பெரியாருடன் பன்னிரண்டு மணி நேரம் (இரவில்தான் தனித்தனியாகப் போட்டுப் பூட்டி விட்டார்களே) ஒன்றாக இருக்க, பேச, கேட்க பழக அருமையான வாய்ப்பு. இரசமான விருந்து. சுவையுள்ள காலமாக அந்த நாலு மாதங்கள் இருந்தன.

சிறை செல்கிறேன் என்பதறிந்த என் கெழுதகை நண்பர் புலவர் அருணகிரிநாதர், அங்கு நிரம்ப நேரம் கிடைக்கும். பல்வேறு விஷயங்களைப் படிக்க இது தூண்டுகோலாக இருக்கும் என்று கூறி, என்னிடம் அபிதான சிந்தாமணி எனும் புத்தகம் கொடுத்திருந்தார். அவர் உனக்கு அவ்வளவாகத் தெரிந்திருக்கக் காரணமில்லை, தம்பி, பொது வாழ்வுத் துறையிலே துவக்கக் கட்டத்தில் எனக்குற்ற தோழராக இருந்தவர் - அவரே ஒரு அபிதான சிந்தாமணி—மணிக்கணக்கில் பேசிக்கொண்டே இருப்போம், பல பல விஷயங்களைப் பற்றியும் ஏதேனும் ஓரளவுக்குக் கூறும் வகையான கல்வியும் கேள்வியும் படைத்தவர்—எனவே அவர், சிறையில் என்னோடு இருப்பதுபோலவே எனக்குத் தோன்றிற்று அபிதான சிந்தாமணியைப் படிக்கும் போதெல்லாம். அந்த 'அபிதான சிந்தாமணி'யை நான் மறப்பதற்கில்லை. இப்போதும் 'அபிதான சிந்தாமணி'யைக் காணும் போதெல்லாம், எனக்கு அந்த நாலு மாதக் கடுங்காவல் நினைவிற்கு வரும்; நினைவிலே அந்தச் சம்பவம் தோன்றியதும், எனக்குள்ளாகவே ஓர் மகிழ்ச்சி. கொள்கை! கொள்கை! என்று கொக்கரித்துக் கொண்டிருந்துவிட்டு, அடக்குமுறை கிளம்பியதும் ஓடிவிடும் 'கோழை உள்ளம்' இல்லை. அழைத்தார்கள் அறப்போரில் ஈடுபட்டான். சிறைத் தண்டனை பெற்றான், என்று எவ்வளவு குரோத எண்ணம் கொண்டவர்களும் ஒரு சமயமில்லாவிட்டாலும் மற்றோர் சமயம் சொல்லிக் கொள்வார்களல்லவா! முதல் சிறை அனுபவத்தின்மீது அபிதான சிந்தாமணி, இரண்டாவது முறை என்ன தெரியுமோ? கேளேன் அதையும்.

ஆச்சாரியார் கவர்னர் ஜெனரலாகி விட்டார்; சென்னை வருகிறார் பவனிக்காக; கூண்டோடு பிடிபட்டுச் சென்னைச் சிறையில் கொண்டு போய் வைக்கப்பட்டிருந்தோம்—1948 இல்! நிர்வாகக் கமிட்டியினர் அவ்வளவு பேரும்—அதிக நாட்களில்லை—ஒரு வாரம்

தான்! அதற்குள் ஆச்சாரியார் வந்தார், பவனி நடத்தினார், கருப்புக் கொடியை வெண்புறா பறக்கவிட்டுக் கொண்டு வானத்திலே வட்ட மிடக் கண்டார், கட்டுக் காவல் பலமாக இருந்தும், அத்தனையையும் துளைத்துக்கொண்டு சென்று சிலர் கருப்புக்கொடி வீசிடக் கண்டார் நாங்கள் உள்ளே இருந்தோம். பெரியார் இருக்கிறார், சம்பத்து அதுபோதுதான் ஆபத்தான டைபாய்டிலிருந்து விடுபட்டு அவன் துணைவி கண்டு பரிதாபப்படத்தக்க (இப்போது பயப்படுவதாகக் கேள்வி! உருவம் கண்டு!) நிலையில் எலும்புக்கூடாக இருக்கிறான். மற்றும் பலர் எல்லோரும்; குடும்பம் முழுவதும், இருமி இளைத்து ஈளைகட்டிய நிலையில் இருந்த நமது மனதுக்குகந்த அழகிரிசாமி அண்ணன் உட்பட.

நானும் அழகிரி அவர்களும் அப்போது பக்கத்து பக்கத்து அறை.

இரவு நேரத்தில், எனக்கு விருந்து கிடைக்கும்—பக்கத்து அறையிலிருந்து

''காணக் கண் கோடி வேண்டும்''—என்று ஆரம்பிப்பார் ஓரடி பாட! பலே! பலே! ஒன்ஸ்மோர்! என்று நான் இந்தப் பக்கத்து அறையிலிருந்து கூவுவேன்.

''தூங்கவில்லையா இன்னும்—அடே அப்பா! நீ தூங்கினால்தான் நான் பாடமுடியும்; நான் பாடுவதைக்கேட்டு விட்டுக் காலையில் கேலி செய்ய நினைக்கிறாய்—இடங் கொடேன்'' என்பார். ''அண்ணேன்! உண்மையாக நன்றாகவே இருக்கிறது. கொஞ்சம் ஆலாபனையும் நடக்கட்டும்'' என்பேன்—அழகிரி அவர்களின் ஆலாபனமும் அருணா சலக் கவிராயர் இயற்றிய கீர்த்தனையும் கிடைக்கும். இரண்டாம் முறையாகக் கண்ட சிறை அனுபவத்திலே எனக்குக் கிடைத்த இந்த ஆலாபனத்தையும், நான் எப்போதும் மறந்திடமுடியாது. எப்படி முடியும்? எவ்வளவு சுவை என்கிறீர்கள்—நித்த நித்தம்!

அலாதியானதோர் வகையான சுவை கிடைத்தது மூன்றாம் முறை சென்றபோது—இதுவும் சில நாட்கள்தான்—இந்தச் சுவை, ஆறு பிஸ்கட்டுகளால் கிடைத்தது, அதைக் கேட்கிறாயா தம்பி, கூறு கிறேன்.

## ஆறு பிஸ்க்கட்டுகள்

''ஆறு நூறு அபராதம், கட்டத் தவறினால் நாலு மாத சிறை வாசம்'' என்று தீர்மானிக்கப்பட்டது. அபராதம் செலுத்தவில்லை, சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டேன். திருச்சியில் எனக்குக்

கிடைத்த வாய்ப்பு எப்படிப்பட்டது தெரியுமா தம்பி, பெரியாரும் அதே நாளில், அதேவிதமான தண்டனை பெற்று, அதே சிறைக்கு வந்தார். இருவரையும் ஒரே போலீஸ்வானில்தான் ஏற்றிச் சென்றார்கள்.

திராவிடர் கழகமாக இருந்தபோது இப்படித்தானே நடந்திருக்கும், இதிலே என்ன ஆச்சரியம் என்று சொல்லுவாய், தம்பி இது திராவிட முன்னேற்றக் கழமாக நீயும் நானும் மாறின பிறகு, நடைபெற்ற நிகழ்ச்சி - 1949 இல்.

'ஆரிய மாயை' எனும் ஏடு தீட்டியதற்காக எனக்குச் சிறை

''பொன் மொழிகள்'' தீட்டியதற்காகப் பெரியாருக்குச் சிறை.

திருச்சி கோர்ட்டாருக்கு இப்படி ஒரு காட்சியைக் காணவேண்டுமென்று ஆசைபோலும். இரண்டு தனித்தனி வழக்குகள்; தனித் தனியாகத்தான் விசாரணைகள்; எனினும் 'தீர்ப்பு' மட்டும் ஒரே நாளில், ஒரே நேரத்தில் அளிக்கப்பட்டது.

பிரிந்து நெடுந்தூரம் வந்துவிட்ட என்னை, அன்று அந்தக் கோர்ட்டில், பெரியாருக்குப் பக்கத்திலே நிற்கச் செய்து, வேடிக்கைப் பார்த்தது வழக்கு மன்றம். போலீஸ் அதிகாரிகள் அதை தொடர்ந்து, ஒரே வானில் ஏற்றிச் சென்றனர்; அதைத் தொடர்ந்து திருச்சி மத்திய சிறையிலே இருந்த அதிகாரி, பெரியார் கொண்டு வந்திருந்த சாமான்களைக் கணக்குப் பார்த்துச் சரியாக இருக்கிறதா என்று கூறும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தார். என் வாழ்க்கையில் நான் மறக்க முடியாத சம்பவம்; எனக்கு உள்ளூரப் பயந்தான்!

கேள்விக் கணையுடன் நிறுத்திக் கொள்ளாமல், அன்புக் கணையையும் ஏவினால், என்னால் எப்படித் தாங்கிக்கொள்ள முடியும் என்றெல்லாம் அச்சப்பட்டேன் ஆனால் இடையிடையே ஒரு தைரியம் எனக்கு; பெரியார் அவ்விதமெல்லாம் எண்ணமாட்டார்—அவர் மனதில் அந்த அளவுக்கு விரோதத்தை வடித்தெடுத்துப் பாய்ச்சிவிட்டிருக்கிறார், அந்த வித்தையிலே விற்பன்னர்; எனவே பயமில்லை என்றிருந்தேன்.

பக்கத்து பக்கத்து அறை; பகலெல்லாம் திறந்துதான் இருக்கும்; பலர் வருவார்கள், இங்கு சிறிது நேரம், அங்கு சிறிது நேரம். இன்னும் சிலர் கூர்ந்து கவனித்தபடி இருப்பார்கள், நாங்கள் இருவரும் பேசிக் கொள்கிறோமா என்று. அவர் அறைக்கு உள்ளே இருக்கும்போது நான் வெளியே மரத்தடியில! அவர் வெளியேவர முயற்சிக்கிறார் என்று தெரிந்ததும் நான் அறைக்கு உள்ளே சென்று விடுவேன்.

இப்படிப் பத்து நாட்கள்!!

நாளைய தினம் எங்களை விடுவிக்கிறார்கள்—முன் தினம் நடுப் பகலுக்குமேல், ஒரு உருசிகரமான சம்பவம் நடைபெற்றது.

பெரியாருக்கு வேலைகள் செய்து வந்த கைதி என் அறைக்குள் நுழைந்து, ''ஐயா! தரச்சொன்னார்'' என்று சொல்லி என்னிடம் ஆறு பிஸ்க்கட்டுகள் கொடுத்தான். கையில் வாங்கியதும், என் நினைவு பல ஆண்டுகள் அவருடன் இருந்தபோது கண்ட காட்சிகளின்மீது சென்றது.

மறுநாளே திடீரென்று 'விடுதலை' கிடைத்தது.

அந்த வேடிக்கையையும் கேள் தம்பி.

எங்களை விடுதலை செய்யப் போகிறார்கள் என்ற செய்தி உள்ளே எங்களுக்குத் தெரிவதற்கு முன்பே, வெளியே தெரிந்துவிட்டிருக்கிறது எனவே எங்களை அழைத்து செல்ல நண்பர்கள் வெளியே 'முஸ்தீபுகள்' செய்யத் தொடங்கிவிட்டிருந்தனர். நமது கழகத்தார் முஸ்தீபுகளிலே மும்முரமாக ஈடுபட்டு, நேரத்தை மறந்து விட்டனர். எனவே, சிறைக்கதவு திறக்கப்பட்டு எங்களை வெளியே அனுப்பியதும், வாசற்படி அருகே, பெரியாரை அழைக்க வந்தவர்கள் கொண்டு வந்த 'மோட்டார்' தான் இருந்தது. அதற்கு என்னையும் அழைத்துச் சென்றனர்; இது போதாதென்று, 'போட்டோ' எடுப்பவர் ஒருவர் ஓடிவந்தார்—இருவரும் அப்படியே, நெருக்கமாக நில்லுங்கள் என்று, போட்டோ எடுப்பவர்களுக்கே உரித்தான சாமர்த்தியத்துடன் கூறி, போட்டோவும் எடுத்துவிட்டார், அது வெளியிடப்படவில்லை; வெளியிடாதிருந்தது நல்லதுதான் என்றே சொல்லுவேன், அவ்வளவு திகைப்பு என் முகத்தில் இருந்தது. அவர் எப்படி இருந்தாரோ, எனக்குத் தெரியாது. வேதாசலம் அவர்கள் வீடுவரையில் சென்று, அவர் இறங்கிக் கொண்டார், நான் அதே மோட்டாரில் சாம்பு இல்லம் சென்றேன்.

கவனித்தாயா, தம்பி, எனக்கு ஏற்பட்ட இந்த அனுபவத்தை.

திராவிட முன்னேற்றக் கழகம் என்ற ஒரு தனி அமைப்புக்குப் பெரியதோர் ஆபத்து, இந்தப் பத்து நாட்கள் என்று நண்பரொருவர் கூறினார். உண்மைதான். நான் அவ்வளவு சுலபத்திலே மனதைக் கரையவிட்டு விடுபவன்தான், ஆனால் பத்து நாட்கள் அவருடன் பேசி, மீண்டும் பழைய நேசத்தைப் பெறுவதற்கான வாய்ப்பு என்னை தட்டித்தட்டி அழைத்தபோதும், நான் அந்தச்

சபலத்துக்கு இடம் கொடுக்காமலிருந்தேன். காரணம் கிராதகன் என்பதல்ல, நான் ஒரு அமைப்புக்குப் பொறுப்பாளியாக்கப்பட்டு விட்டதால், நான் மேற்கொள்ளும் எந்த நடவடிக்கையும், அந்த அமைப்பை உருகுலைக்கக்கூடியதாக இருக்கக்கூடாது என்ற நேர்மையான எண்ணத்தினால்தான்.

**நாலு சாக்லெட்!**

மும்முனைப் போராட்டத்திலே ஒருநாள், எனக்கு நண்பர் குருசாமியுடன் சேர்ந்து சிறையில் இருக்கும் வாய்ப்பும் கிடைத்தது. அவர் சிறையில் கீழ்வரிசை அறையிலே தங்கியிருந்தார்—நான் தம்பிகளுடன் மேல் அறையில், மாடியில்! பார்! பார், இதிலேகூடக் கீழ்மேல் பேசுகிறான் என்று கூறிவிடப் போகிறார்கள். தம்பி, குருசாமிக்கு அப்போது உடல் நலம் இல்லை, எனவே மாடி ஏறவில்லை. அந்த ஒரே நாளில் எனக்குச் சுவையானதோர் அனுபவம்—அதையும் நான் மறப்பது இயலாது.

என்னைக் காண நண்பர் சிலர் வந்தனர்—அதே சமயத்தில் தோழர் குருசாமி அவர்களைக்காண தோழியர் குஞ்சிதமும், ரஷ்யாவும் (விரைவில் டாக்டர்!) வந்திருந்தனர். சந்தித்தோம்—கம்பிகள் இடையில்! கம்பிகள் மட்டுமா, அமைப்புகளே வேறுவேறு ஆகிவிட்ட நிலைமை. தோழியர் குஞ்சிதம் அவர்கள் நாலு சாக்லெட்டைத் தந்தார்கள்! அதைவிடச் சுவையுள்ள உணவு எனக்கு அவர்கள் இல்லத்தில் பலமுறை கிடைத்தது உண்டு. ஆனால், அந்த நாலு சாக்லெட்டுக்கு உள்ள சுவையே அலாதியானதல்லவா.

தம்பிக்கு கடிதம் 31-7-55 தொடரும்

---

அப்போதே சொன்னேன்

# அண்ணாவின் நாடக தொடக்க விழா



பேரறிஞர் அண்ணா எழுதிய ''அப்போதே சொன்னேன்'' என்ற கதை சமூக நாடகமாக வருகிற மார்ச் மாதம் அரங்கேற்றப்படுகிறது.

பேரறிஞர் அண்ணா இலக்கிய பேரவையும், வான்மதி கலைமன்றமும் இணைந்து தயாரிக்கும் இந்த நாடகத்தின் தொடக்க விழா பேரறிஞர் அண்ணா வீட்டில் நடந்தது. விழாவுக்கு பேவரிட் செல்வம் முன்னிலை வகித்தார். சினிமா டைரக்டர் கார்வண்ணன் நாடகத்தை தொடங்கி வைத்தார். சி. என். பரிமளம், வானமதி கலைமன்ற பொதுச் செயலாளர் நாராயணன் ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர்.

முடிவில் கலைமன்றத் தலைவர் நவநீதகிருஷ்ணன் நன்றி கூறினார். 6-2-93

# காஞ்சி நாடு...வாழும்

''பட்டி செங்குட்டுவன்''

குருவிகள் பறக்கும் ஆகாயம்—கொள்கை
குயில்கள் இசைக்கும் தீங்கானம்
அருவிகள் போடும் ஆலோலம்—எங்கள்
அண்ணா பேச்சின் தனிச்சாரம்.

இருக்கும் நிலையை எடுத்தோதும்—நல்
இனிய கதைகள் ஏராளம்
பொறுத்தது போதும் பொங்குஎன
போருக்கழைக்கும் பூபாளம்.

மடலாய்க் காயும் தமிழினத்தை—மாற்ற
மடல்கள் தீட்டியதவர் கையாம்.
உடலால் உணர்வால் மட்டுமின்றி—தன்
உயிரால் தேய்ந்தார் இதுமெய்யாம்.

எடுத்துக் காட்டு பலகூறி—எமை
எழுச்சி கொள்ள வைத்தவராம்!
அடுத்துக் கெடுக்கும் மதியினரை—புது
அடுக்குமொழியால் திருத்தியவராம்!

ஏற்றத் தாழ்வு மேடுபள்ளம்—தனை
இடித்துத் தூர்க்கும் எழுத்தாளன்
காற்றைப் போல விரைந்தோடி—நற்
கழகம் வளர்த்த கருத்தாளன்.

எத்தனைக் காலம் வாழ்ந்தாலும்—அண்ணன்
எழுத்தே தமிழரின் தனிவேதம்
கொத்தாய் ஏடுகள் பலவரினும்—நற்
குறிப்பாய் ''காஞ்சிநாடு'' தான் வாழும்.

# விடுதலை சம்பந்தம் அவர்கள் படத்திறப்பு

வளையாத நெளியாத பெரியாரின் பெருந்தொண்டர் நாகரசம் பட்டி திரு. விடுதலை சம்பந்தம் அவர்கள் அண்மையில் நம்மை விட்டுப் பிரிந்தார்கள். 13-2-1993 அன்று சென்னையில் அவருடைய படத்திறப்பு விழா நடைபெற்றது.

டாக்டர் நன்னன் அவர்கள் தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் கலைஞர் அவர்கள் படத்தை திறந்து வைத்து சொற்பொழிவாற்றினார்கள். விடுதலை திரு சம்பந்தம் அவர்களின் நீண்டகால நண்பர் திரு. க. இராசாராம், திரு. ஆற்காடு வீராசாமி, டாக்டர் ராமச்சந்திரா, டாக்டர் மிஸ்ரா, டாக்டர் சம்பூர்ணம், டாக்டர் சண்முகசுந்தரம், திரு. சண்முகம், I.A.S திரு. பண்டரிநாதன், I.A S. டாக்டர் சி. என். ஏ. பரிமளம் ஆகியோர் இரங்கலுரையாற்றினர்.



பூமியில் உள்ள தங்கம் அத்தனையையும் நகையாகச் செய்து கொள்ள முடியாது. ஆகையால் தேவையான அளவுக்குத் தங்கத்தைக் கொடுத்து, நகைகள் செய்யச் சொல்வதுபோல், நம்மிடத்தில் ஏராளமான கருத்துக் குவியல் இருந்தாலும் தேவையானதைப் பயன்படுத்த முன்வரவேண்டும்.

# அறந்தாங்கியில் புரட்சிக் கவிஞர் பொதுநலப் பேரவை துவக்கப்பட்டது

தலைவர் : வின்சென்ட், இரா. இராசேந்திரன்

துணைத்தலைவர் : அ. தருமரெங்கராசன்

செயலாளர் : பந்தா பாலசந்தர்

துணைச் செயலாளர் : கா. கருப்பையா

பொருளாளர் : கூம்பினிமை நடராசன்

மற்றும் 16 பேர் செயற்குழு உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

217288

# மடல்கள்

திருமிகு, டாக்டர் சி என். ஏ. பரிமளம், அவர்களுக்கு, உங்களின் ஆசியையும், அன்பையும் என்றும் மறவாத காரியாபட்டி அறிஞர் அண்ணா இலக்கிய பேரவையில் உறுப்பினர்களும், உறுப்பினர்களின் சார்பாக வெ. ராஜசேகரன், காமராஜர் மாவட்ட செயலாளர் பேரறிஞர் அண்ணா இலக்கிய பேரவை எழுதியது

எனக்கும், காமராசர் மாவட்ட அமைப்பாளர் திரு A. வேங்கட சாமி, B.Sc. அவர்களுக்கும், தோழர் வெ. பிரகாஷ் அவர்களுக்கும் தாங்கள் ''காஞ்சி நாடு'' இதழ் மற்றும் அதற்கான ரசீதும் பெற்றுள்ளோம்.

இதழின் ஒவ்வொரு பக்கமும் சுவையாகவும், அருமையாகவும் இருந்தது. எங்களின் நண்பரும், தோழருமான திரு. போஸ், B.Sc. அவர்களின் திருமணம் பற்றி எழுதி இருந்தீர்கள் மிக்க நன்றி

மேலும் தாங்களை வைத்து காரியாம்பட்டி N G O. நகர் கேலண்ட்லி யூத் வெல்ஃபேர் அசோசியேஷன் மற்றும் அறிஞர் அண்ணா இலக்கிளப் பேரவையும் விளையாட்டுப் போட்டி நடத்துவது என திட்டமிட்டிருந்தோம். அது தாங்கள் திருச்சி சென்றிருந்தால் தாங்களை அழைக்க முடியாமல் போய் விட்டது. அதற்காக மிகவும் வருந்துகிறோம்.

எனவே, துவக்க விழாவில் திரு P. ராமமூர்த்தி, B.A அவர்களி விளையாட்டுப் போட்டிகள் (கபாடி, கிரிக்கெட்) துவக்கி வைத்து அறிஞர் அண்ணாவை பற்றி மிகவும் சிறப்பாக சிறப்புரையாற்றினார்.

பரிசளிப்பு விழாவிற்கு தலைமை வகித்து திரு. ஆ ராமசாமி (கேஷிய) அவர்களும், முன்னிலை வகித்து, திரு. டாக்டர் S. உமா மகேஸ்வரன் M B.B.S அவர்களும், வரவேற்புரை திரு, வெ இராஜ சேகரன் (காமராசர் மாவட்ட செயலாளர், அறிஞர் அண்ணா இலக்கிய இலக்கிய பேரவை) அவர்களும், பரிசளிப்பு திரு. A. சந்திரன் (அசிட்டெண்ட் கமிஷனர் ஆப் லேபர்), கோவை அவர்கள் பரிசளித்து அறிஞர் அண்ணாவைப் பற்றி சிறப்பாக பேசினார்கள் விழாவிற்கு வந்தோர்களை காமராசர் மாவட்ட அமைப்பாளர் திரு A போஸ், B.Sc , வரவேற்றார்! திரு. A. அருண், (B.Sc) தோழர் K. முருகன் அவர்களும் நன்றி நவில விழா இனிதே முடிவுற்றது. கபாடி போட்டியில் முதல் பரிசாக ரூ. 50/-ஐ அய்யனார் மில் (மல்லாங் கிணறு) அணியினரும், 2வது பரிசு ரூ. 30/-ஐ தேனூர் பாயும் புலி அணியினரும், 3வது ரூ. 20/-ஐ மரைக்குளம்-1, 4வது பரிசி ரூ. 10/-ஐ மரைக்குளம்-2 அணியினரும், கிரிக்கெட் போட்டியில் முதல் பரிசாக A. செந்திவேல் நினைவு கேடயம் காரியாபட்டி கேலக்ஸி கிரிக்கெட் குழுவும், இரண்டாவது பரிசு A V. செல்வம் நினவு கேடயம் அருப்புக் கோட்டை மணி நகரம் கிரிக்கெட் குழுவும் பெற்றன.



217288

நன்கொடை ரூ. 2-00 பதிவு எண்: G6/TN/MS(C)1239

காஞ்சி

# நாடு

மேலும் காஞ்சி நாடு இதழுடன் அடையாள அட்டை முடிந்தால் அனுப்பி வைக்கவும். இப்படிக்கு தாங்கள் உண்மையுள்ள,

V. இராஜசேகரன் மற்றும்

அறிஞர் அண்ணா இலக்கிய பேரவை உறுப்பினர்கள்.

தலைவர் அவர்களுக்கு,

இன்றைய இளைய சமுதாயத்தினரிடையே தமிழ் உணர்வு, இன உணர்வு, இல்லை என்று அறிஞர்களும், பல தலைவர்களும் பேசுகின்றனர் உண்மை தான். மொழி, உணர்வு, இன உணர்வு ஏற்படாததற்கும், தடம் மாறியதற்கும், காரணமே இப்போது பேசுகின்ற அறிஞர்களும், தலைவர்களும் முக்கிய காரணமாகும். தலைவலி வந்த சமயம் தமிழைப்பற்றி பேசுவதோடு சரிதான். அதற்கு அடுத்து? இன உணர்வு மொழி உணர்வு பற்றிய கருத்துக்களை நாம் இளைஞர்களிடம் கொண்டு செல்ல மறந்து விட்டோம். மறந்து விட்டோம் என்பதை விட, நேரம் இல்லையென்றுதான் கூறவேண்டும். அதோடு பெரியார், அண்ணா ஆகியோரின் எண்ணங்களை, எழுச்சி கருத்துக்களை அணைபோட்டு தடுத்து இளைய சமுதாயம் தெரிந்துகொள்ள முடியாமல் செய்து விட்டு இப்போது உணர்வு ஏற்படவில்லை என்று கூறுவது அபத்தம். இப்படிப்பட்ட கால கட்டத்தில் 'ஊட்டும் உணர்வூட்டி ஒன்றாய் தமிழர்களை துட்டும் நமது குயில்'' என்ற தாசனின் குரல்போல் இன்று தமிழ் இளைஞர்களிடையே மங்கிபோன தமிழ் உணர்வை தட்டி எழுப்பிக் கொண்டிருக்கும் ''காஞ்சி நாடு'' வளம்பெற வளர்ச்சிபெற தங்கள் பணி தொடரவேண்டும்.

அன்பன்

த. செந்தமிழன் நெய்வேலி-2.

பேரறிஞர் அண்ணா இலக்கியப் பேரவை வழங்கும் நாடு இதழ் சமுதாய மறுமலர்ச்சிக்கு ஒரு வலிமை மிக்க அடித்தளமாகும். தொடர்ந்து பணி செய்து நம் நாட்டின் பிணி நீக்க நாடு இதழை அனைவரும் நாடவேண்டும்,

வின்சென்ட்

இரா. இராசேந்திரன் கோட்டை அறந்தாங்கி.

ஆசிரியர், வெளியிடுபவர்: மலர்வண்ணன் அண்ணாதுரை
7, அவின்யு சாலை, சென்னை-34.
அச்சிடுபவர்: C. R. கண்ணன், அண்ணன் அச்சகம், சென்னை-24.




பெறுநர்:

DIRECTOR
TAMILNADU ARCHIVES
MADRAS 600 008

விடுநர்:

பேரறிஞர் அண்ணா
இலக்கியப் பேரவை
7. அவின்யு சாலை,
சென்னை-600 034.